{ශ්‍රී ලංකා... / முழு பதிப்புரிமை உடையது / All Rights Reserved / முழு பதிப்புரிமை உடையது }

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித்திணைக்களம்- வடமத்திய மாகாணம்
Department of Education – North Central Province

தரம் - 13 | இறுதித் தவணைப் பரீட்சை - 2025 | நேரம் :

பாடம் : இஸ்லாம் | வினாத்தாள்: | சுட்டெண் -

## புள்ளி வழங்கல் திட்டம்

## வினாத்தாள் I

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 1 | 21. | 4 | 31. | 2 | 41. | 1 |
| 02. | 4 | 12. | 5 | 22. | 3 | 32. | 2 | 42. | 4 |
| 03. | 3 | 13. | 3 | 23. | 5 | 33. | 3 | 43. | 2 |
| 04. | 2 | 14. | 1 | 24. | 4 | 34. | 3 | 44. | 4 |
| 05. | 3 | 15. | 4 | 25. | 2 | 35. | 5 | 45. | 3 |
| 06. | 2 | 16. | 1 | 26. | 2 | 36. | 4 | 46. | 3 |
| 07. | 3 | 17. | 4 | 27. | 4 | 37. | 2 | 47. | 5 |
| 08. | 4 | 18. | 3 | 28. | 1 | 38. | 5 | 48. | 4 |
| 09. | 2 | 19. | 3 | 29. | 3 | 39. | 3 | 49. | 4 |
| 10. | 5 | 20. | 4 | 30. | 1 | 40. | 1 | 50. | 1 |

ஒரு சரியான விடைக்கு 1 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 1x50 = 50

# வினாத்தாள் II

## பகுதி I

**1. (i) இபாதத் என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்துக.**

இபாதத் என்பது 'அபத'' ''உபூதிய்யா'' எனும் அரபு மூலவேர்ச் சொற்களிலிருந்து தோன்றிய பதமாகும். அடிபணிதல், பணிபுரிதல், ஊழியம் செய்தல், அடிமையாய் இருத்தல், வணங்குதல், வழிபடுதல் முதலான கருத்துக்களை இப்பதம் தருகின்றது.

இஸ்லாமிய பரிபாசையில் இபாதத் என்பது, இஸ்லாத்தை விசுவாசிக்கும் ஒருவன் அல்லாஹ்வின் மீது கொண்ட உச்ச அன்பின் அடிப்படையில் அவனது ஏவல் விலக்கல்களுக்குப் பூரணமாகக் கட்டுப்பட்டு வாழ்வதனைக் குறிக்கின்றது.

***(சொற் கருத்திற்கு 1 புள்ளியும் பிரயோக கருத்திற்கு 1 புள்ளியுமாக மொத்தம் 2 புள்ளிகள்)***

**(ii) தொழுகையினால் கிடைக்கும் ஆன்மீக, இலௌஹீகப் பயன்கள் இவ்விரண்டு தருக.**

**ஆன்மீக பயன்கள்**

- இறை மன்னிப்பைப் பெற்றுத்தரக்கூடியது
- சுவனத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிட்டுகின்றது.

**இலௌஹீகப் பயன்கள்**

- தொழுகை மானக்கேடான, பாவமான காரியங்களிலிருந்தும் பாதுகாக்கின்றது.
- தொழுகை ஆரோக்கியமாக வாழ்வதற்கு தளமமைத்துக் கொடுக்கின்றது.
- வாழ்க்கையில் நேர முகாமைத்துவம் பேணுவதற்கும், ஒழுங்குற வாழ்வதற்கும் பயிற்சியைத் தருகின்றது.
- தலைமைத்துவப் பயிற்சி, தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படல் என்பன வளர்க்கப்படுகின்றன.

***(இவை போன்ற இவ்விரண்டு பயன்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1x4 = 4 புள்ளிகள்)***

**(iii) ஹஜ் கடமையின் சமூகவியல் சார்ந்த இலக்குகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.**

- உடற் சுத்தம் பேணுதல்
- பெரும் பாவம், வீண் வார்த்தைகளிலிருந்து தவிர்ந்திருக்கச் செய்தல்
- அடுத்தவர்களை மதித்து நடத்தல்
- ஒழுங்கு பேணுதல், நேரத்திற்கு இயங்கச் செய்தல்
- முஸ்லிமினது உயிர், மானம், செல்வம் என்பவற்றுக்கான பாதுகாப்பு உத்தரவாதம்
- முஸ்லிம் உம்மத்தின் ஒருமைப்பாடு வலியுறுத்தப்படல்
- இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படைகளோடு(மக்கா, மதீனா) நெருக்கத்தை ஏற்படுத்தல்
- ஆன்மீக, லௌகீக பயன்பாடுகளை அடைந்து கொள்ளச் செய்தல்

***(இவை போன்ற மூன்று விடயங்கள் விளக்கப்பட்டிருப்பின் 3x2 =6 புள்ளிகள்)***

**(iv) ஸகாத்தைக் கூட்டாக நிறைவேற்றவேண்டியதன் அவசியம் பற்றி நான்கு விடயங்கள் கொண்டு விபரிக்குக.**

- ஸகாத் சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சமூகக் கடமையாக இருக்கின்றமை.
- ஸகாத்தைச் சேகரித்து, பாதுகாத்து, கணக்கிட்டு, விநியோகிப்பதற்கு கூட்டமைப்பு அவசியமாக இருக்கின்றமை.
- ஸகாத்தோடு தொடர்புடைய குர்ஆன் போதனையில் ''ஆமிலூன்'' எனும் சொல் இதனை வேண்டி நிற்கின்றமை.
- நபி (ஸல்) அவர்கள் தனது தூதுவர்களுக்கு ஸகாத்தை சேகரித்து விநியோகிக்கும் பணியை மேற்கொள்ளுமாறு வேண்டியுள்ளமை.
- ஸகாத் சேகரிப்பு, களஞ்சியப்படுத்தல், கணக்கிடல், உரியவர்களுக்கு வழங்கல் என்பவற்றைக் கூட்டமைப்பின்றி சரியாக நிறைவேற்ற முடியாமை.
- தனியாகச் செல்வந்தர்கள் ஸகாத்தை வழங்கும் போது அதனைப் பெறுபவர்கள் செல்வந்தர்களின் கெடுபிடிகளுக்கு ஆளாகி சுய கௌரவம் பாதிக்கப்பட முடியுமாக இருக்கின்றமை.

***(இவை போன்ற நான்கு விடயங்கள் விளக்கப்பட்டிருப்பின் 4x2 =8 புள்ளிகள்)***

**2.**

**i. பைத்துல்மால் என்றால் என்பதை அடையாளப்படுத்துக.**

பைத்துல்மால் என்பது இஸ்லாமிய நாட்டில் காணப்படும் **அரச திறைசேரியாகும்**. இஸ்லாமிய அரசின் நிழலில் வாழும் பிரசைகளின் அத்தியாவசிய தேவைகளை உறுதிப்படுத்துவதற்கான பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக அரசினால் திரட்டப்படும் பணத்தைப் பராமரிப்பதற்கான ஒரு வழிமுறையாக பைத்துல்மால் காணப்படுகிறது.

இவ்வழிமுறை நபி(ஸல்) அவர்களது காலம் முதல் அரச நிதி நிறுவனமாகவும் பொதுத் திறை சேரியாகவும் நடை முறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. எனினும் 'பைத்துல்மால்' என்ற பெயர் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுடைய காலத்திலிருந்தே இஸ்லாமிய வழக்கத்தில் இடம்பெறுகிறது.

***(சொற் கருத்திற்கு 1 புள்ளியும் பிரயோக கருத்திற்கு 1 புள்ளியுமாக மொத்தம் 2 புள்ளிகள்)***

**ii. இஸ்லாமிய வங்கி முறைமையின் அடிப்படைகள் நான்கைக் குறிப்பிடுக.**

- வட்டியுடனான தொடர்புகள், செயற்பாடுகளை முற்றாகவே தவிர்த்தல்.
- பொருளாதார அபிவிருத்தியோடு சமூக அபிவிருத்தியையும் தொடர்புபடுத்தல்.
- செல்வப் பரிமாற்றங்களை இலகுபடுத்தல்.
- உற்பத்தித் திறனை மேம்படுத்தல்.
- மூலதனத்தை விருத்தி செய்தலும் உறுதிப்படுத்தலும்.
- இஸ்லாமிய அடிப்படையிலான கூட்டுவாழ்வுக்கும், பரஸ்பர ஒத்துழைப்புக்கும் வழி வகுப்பதோடு மக்கள் மத்தியில் நீதியானதும், சமத்துவமானதுமான வளப்பகிர்வு இடம்பெற உதவுதல்.
- சமூக ஐக்கித்துக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் வகைசெய்தல்.

***(இவை போன்ற நான்கு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 4x1 =4 புள்ளிகள்)***

**iii. இஸ்லாம் அனுமதித்துள்ள வர்த்தக முயற்சிகள் நான்கைக் குறிப்பிட்டு அவற்றின் வரைறைகளையும் விளக்குக.**

1. **முஷாரகா :** பலர் ஒன்று சேர்ந்து தத்தமது மூலதனத்தை ஒன்று சேர்த்து ஓர் உற்பத்தி அல்லது தொழில் முயற்சியில் பங்குதாரர்களாக ஈடுபடும் அமைப்பையே இது குறிக்கின்றது.''
2. **முழாரபா :** ஒரு தரப்பினரின் மூலதனத்தையும் மற்றொரு தரப்பினரின் உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வர்த்தக முயற்சியின் போது கிடைக்கப்பெறும் இலாபத்தில் இரு தரப்பினரும் பங்குகொள்ளுதல் என்ற வகையில் இடம்பெறும் ஒரு வகைக் கூட்டுப் பங்காண்மை உடன்படிக்கையே முழாரபாவாகும்.''
3. **முராபஹா :** முராபஹா என்பது ஒரு வியாபாரி தனது விற்பனைப் பொருளின் கொள்விலையை அதனை வாங்க வருபவரிடம் தெளிவுபடுத்தி அதனோடு தான் அப்பொருளை விற்கின்ற போது எதிர்பார்க்கப்படுகின்ற குறிப்பிட்ட இலாபத் தொகைக்கு அப்பொருளை விற்பனை செய்வார். முராபஹாவில் கொள்வனவு விலை, இலாபம் என்பவற்றைக் கொள்வனவாளர்கள் அறிந்து கொள்வர்.
4. **முஸாரஆ :** விவசாயப் பங்குடமை என்று இது அழைக்கப்படும். ஒருவர் தனக்குச் சொந்தமான நிலத்தை இன்னொரு உழைப்பாளரோடு இணைந்து உற்பத்திக்காகப் பயன்படுத்துவதே விவசாயப் பங்குடமை ஆகும். நிலங்களைத் தரிசாக வைத்திருக்காது பயன்படுத்த வேண்டுமென்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும்.

***(இவை போன்ற நான்கு வர்த்தக முயற்சிகள் குறிப்பிடப்பட்டிருப்பின் ஒன்றுக்கு 1/2 புள்ளி வீதமும் அவை சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் ஒன்றின் விளக்கத்திற்கு 1 புள்ளி வீதமும் 1.5x4 =6 புள்ளிகள்)***

**iv. பொருளாதார ஏற்றத்தாழ்வைக் குறைக்க இஸ்லாம் முன்வைத்த தீர்வுகள் நான்கை குறிப்பிட்டு அவற்றில் இரண்டை நடைமுறை வாழ்வோடு தொடர்புபடுத்தி விளக்குக.**

1. ஸகாத் கடமையை முறையாக திட்டமிட்டு முன்னெடுத்தல்
2. வாரிசு சொத்துப் பங்கீட்டு முறையை முறையாக நடைமுறைப்படுத்தல்
3. பைத்துல் மால் அல்லது பைத்துஸ் ஸகாத் நிதியத்தினூடான வறுமை ஒழிப்புத்திட்டங்களை செயற்படுத்தல்
4. இஸ்லாமிய வங்கிமுறையினூடாக தொழில் முயற்சிகளை ஊக்குவித்தலும், கடன் உதவிகளை வழங்குதலும்
5. வக்பு, ஸதகா, ஜிஸ்யா, கராஜ், ஹுமுஸ் போன்ற வருமான வழிகளினூடக ஏழைகளை கவனித்தல்

***(இவை போன்ற நான்கு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் ஒன்றுக்கு 1 புள்ளி வீதமும் அவற்றில் இரண்டு விளக்கப்பட்டிருப்பின் ஒன்றுக்கு 2 புள்ளிகள் வீதமும் 4+2x2 = 8 புள்ளிகள்)***

**3.**

**i. மஹ்ரம், அஜ்னபி ஆகிய பதங்களை வரைவிலக்கணப்படுத்துக.**

மஹ்ரம் என்பது ஒரு பெண்ணுக்கு (அல்லது ஆணுக்கு) நிரந்தரமாக அல்லது தற்காலிமாக திருமணம் செய்வது தடைசெய்யப்பட்ட உறவினர் என்று பொருள்.

அதாவது, இரத்தத் தொடர்பு, பாலூட்டிய உறவு அல்லது திருமணத்தால் உருவாகும் உறவு மூலமாக திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படாதவர்கள்.

அஜ்னபி என்பது ஒருவருக்கு (ஆண் அல்லது பெண்) மஹ்ரம் அல்லாத நபரை குறிக்கும். அதாவது, திருமணம் செய்வது அனுமதிக்கப்படும் ஆண் அல்லது பெண்.

***(ஒன்றின் வரைவிலக்கணத்திற்கு 1 புள்ளி வீதம் 1x2=2 புள்ளிகள்)***

**ii. தலாக் என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்தி அதன் வகைகளைத் தெளிவுபடுத்துக.**

“குடும்ப வாழ்க்கையில் பொறுப்பை நிறைவேற்றுவதில், நடத்தை ரீதியில், கருத்தொற்றுமை ஏற்படாத நிலையில் கணவன் மனைவிக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட்டு சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலை ஏற்படும் போது திருமண பந்தத்திலிருந்து விலகிக் கொள்வதற்கு இஸ்லாம் வழங்கியுள்ள அனுமதியே விவாகரத்தாகும்.’’

- தலாக் சொல்லப்படும் முறை, சந்தர்ப்பம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து தலாக் இரண்டு வகையாகப் பிரித்து நோக்கப்படும்.

  1. **முறையான தலாக் (தலாக் ஸுன்னி):** பெண் சுத்தமாக இருக்கும் காலத்தில் உடலுறவு கொள்ளாத நிலையில் தலாக் சொல்லல்.
  2. **முறையற்ற தலாக் :** முறையான தலாக்கின் நிபந்தனைகள் மீறப்படும் வகையில் தலாக் கூறுவதைக் குறிக்கின்றது.

- தலாக் சொல்லப்படும் சந்தர்ப்பத்தைக் கருத்திற் கொண்டு அது இரண்டு வகைகளாகப் பிரித்து நோக்கப்படும்.

  1. **ரஜஈ (மீளத்தக்கது) :** மீளவாய்ப்புள்ள தலாக் ஆகும். முறையான தலாக்கின் போது முதல் தடவை அல்லது இரண்டாம் தடவை தலாக் சொல்லப்பட்டு இத்தாக் காலம் முடிவதற்குள் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்குத் தம்பதிகளுக்கு உரிமை உண்டு. இவ்வாறு சேர்ந்து வாழ்வதற்கு புதிய நிபந்தனைகள் எதுவும் இல்லை.
  2. **பாஇன் (மீள முடியாதது)**

     - பாஇன் ஸுக்ரா (சிறிய பிரிவினை) : பாஇன் ஸுக்ரா என்பது முறையான தலாக்கின் போது மூன்றாம் முறை தலாக் சொல்லப்படாத நிலையில் இத்தாக் காலம் பூர்த்தியாகி விடுமானால் புதியதொரு நிகாஹ் ஒப்பந்தத்தின் மூலம் தம்பதிகள் மீண்டும் சேர்ந்து வாழ அனுமதியுள்ள நிலையினையே குறிக்கின்றது.

     - பாஇன் குப்ரா (பெரிய பிரிவினை): தலாக் பாஇன் குப்ரா என்பது மூன்று தலாக்கும் கூறப்பட்டு முடிவுற்ற நிலையில் உள்ள பெரிய பிரிவினையைக் குறிக்கின்றது. இதன் பின்னர் இவர்கள் திருமணத்தின் மூலம் சேர்ந்து வாழ விரும்பினால் அதற்குரிய வழிகாட்டலையும் அல்குர்ஆன் தெளிவுபடுத்தியுள்ளது

***(வரைவிலக்கணத்திற்கு 2 புள்ளிகளும் வகைப்படுதலுக்கு 2 புள்ளிகளுமாக மொத்தம் 2x2=4 புள்ளிகள்)***

**iii. இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் ஆறினைக் குறிப்பிட்டு விளக்குக.**

1. ஆணைப் போன்றே பெண்ணும் ஒரே ஆன்மாவிலிருந்து தோன்றியவர்கள்
2. மார்க்கம், விளக்கம் என்பவற்றில் சமத்துவம்
3. நற்கூலி பெறுவதிலும், சுவனத்தை அடைவதிலும் சம உரிமை
4. ஆணைப் போலவே பெண் மீதும் இஸ்லாமிய கடமைகள் வாஜிபாகும்.
5. இஸ்லாத்தைக் கற்பதும், அறிவைப் பெற்றுக் கொள்வதற்குமான உரிமை.
6. சமூகப் பணிகளில் ஈடுபடல்
7. கற்பைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை
8. உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்புப் பெறும் உரிமை

***(இவை போன்ற ஆறு விடயங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் ஒன்றுக்கு 1 புள்ளி வீதம் 6x1 = 6 புள்ளிகள்)***

**iv. இத்தா கடமையாக்கப்பட்டதன் நோக்கங்கள் நான்கை விரிவாக விளக்குக.**

1. இத்தா என்பது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டுள்ள இபாதத் என்பதை விளங்கி நடைமுறைப்படுத்தல்.
2. இறந்த அல்லது விவாகரத்து செய்த கணவன் மூலம் குறித்த பெண் கருவுற்றிருக்கிறாளா என்பதை அறிந்து கொள்வதற்குரிய கால எல்லை.
3. கணவனை இழந்த பெண் துக்கம் அனுஷ்டிப்பதற்குரிய கால எல்லையை வரையறுத்தல்.
4. ஒரு குழந்தையின் பல்துறைசார்ந்த உரிமைகளைப் பேணுவதற்கு இத்தா உதவுகின்றமை. (தந்தை யார், அதன் வாரிசுச்சொத்தை தீர்மானித்தல், மஹ்ரம் அஜ்னபி தீர்மானித்தல்)
5. தலாக் ரஜஈ ஆயின் மீண்டும் இணைந்து வாழ்வதற்கான சந்தர்ப்பம். மேலும் தன் தவறுகளை புரிந்து அவற்றுக்காக வருந்தி மீண்டும் இணைந்து வாழ்வதற்கான வாய்ப்பைப் பெறல்.

***(இவை போன்ற நான்கு விடயங்கள் குறிப்பிட்டு விளக்கப்பட்டிருப்பின் ஒன்றுக்கு 2 புள்ளிகள் வீதம் 2x4 = 8 புள்ளிகள்)***

## பகுதி II

**4.**

**i. பிரபஞ்சம், மனிதன், மனிதவாழ்வு பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம் ஏணைய சித்தாந்தங்களுடன் வேறுபட்டுள்ள விதத்தை ஆராய்க.**

- பிரபஞ்சத்தின் தோற்றம்: இஸ்லாமிய நம்பிக்கைப் படி அல்லாஹ் பிரபஞ்சத்தை படைத்தான் மற்ற சித்தாந்தங்கள் அது இயற்கையாக அல்லது தானாக உருவானது எனக் கூறுகின்றன.
- மனிதனின் தோற்றம்: அல்லாஹ் ஆதம் (அலை) ஹவ்வா (அலை) இருவரையும் படைத்ததன் மூலம் மனித இனம் தோன்றியது. மற்ற சித்தாந்தங்கள்: பரிணாமக் கோட்பாடு (Evolution) போன்ற இயற்கை விளக்கங்களை முன்வைக்கின்றன.
- மனிதனின் வாழ்வின் நோக்கம் நோக்கம் அல்லாஹ்வை வணங்குவது மற்றும் நல்லொழுக்கமாய் வாழ்வது. அல்லாஹ்வின் பிரதிநிதி (கலீ∴பா) என பூமியில் பொறுப்புடன் நடந்து கொள்வது. பூமியை வளப்படுத்துவது ஆகியவற்றின் மூலம் மறுமை வெற்றிக்கு தயாராவது. ஏனைய சித்தாந்தங்கள் இவ்வுலக வாழ்க்கைதான் இறுதி என நம்புகின்றன.

***(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5x 2=10 புள்ளிகள்)***

**ii. "இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள் நற்பண்புகளை வளர்க்கின்றன" என்ற கருத்தை நான்கு வணக்கங்களுக்கூடாக ஆதரங்களுடன் விளக்குக.**

- கலிமதுஸ் ஷஹாதா : அல்லாஹ்வை ஒரே இறைவனாகவும், நபி முஹம்மது (ஸல்) அவர்களை தூதராகவும் நம்புவதன் மூலம் நம்பிக்கையும் நேர்மையும் வளர்கின்றன. இது உண்மையுணர்வு, அடக்கம், மற்றும் ஒற்றுமை உணர்வை உருவாக்குகிறது.
- தொழுகை: தினமும் ஐந்து வேளைகள் தொழுவதன் மூலம் ஒழுக்கம், நேர்த்தி, மற்றும் தூய்மை பழக்கம் உருவாகிறது. அல்லாஹ்வின் நினைவில் நிலைத்திருப்பதால் குற்றம் தவிர்க்கும் மனப்பான்மை வளர்கிறது.
- ஸகாத் பொருளாதார சமத்துவம் மற்றும் கருணை, பரிவு ஆகிய பண்புகளை வளர்க்கிறது. ஏழை, துன்புறும் மக்களை உதவுவதன் மூலம் சமூக பொறுப்பு உணர்வு உருவாகிறது.
- நோன்பு: ரமழான் மாத நோன்பு அடக்கமும் பொறுமையும் கற்பிக்கிறது. பசியையும் தாகத்தையும் அனுபவிப்பதால் ஏழைகளின் துயரத்தை உணரும் மனம் உருவாகிறது.
- ஹஜ் கடமை சமத்துவம், ஒற்றுமை, மற்றும் தியாகம் போன்ற நற்பண்புகளை வலுப்படுத்துகிறது.

***(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5x 2=10 புள்ளிகள்)***

5.

**i. மஸ்லஹா முர்ஸலா என்றால் என்ன என்பதை விளக்கி, பிக்ஹுத் துறையில் அதன் பிரயோகம் பற்றி விபரிக்குக.**

- மஸ்லஹா முர்ஸலா என்பது குர்ஆன், ஹதீஸ், இஜ்மா, கியாஸ் போன்ற ஆதாரங்களில் நேரடி ஆதாரம் இல்லாவிட்டாலும், மக்களின் நலனுக்காக ஏற்படுத்தப்படும் சட்ட தீர்மானம் எனப் பொருள்.
- இஸ்லாமிய சட்டத்தின் முக்கிய நோக்கம் மனிதனின் நன்மை (மஸ்லஹா) மற்றும் தீமைத் தவிர்த்தல் (ம∴ப்சதா) ஆகும். எனவே, எந்த விஷயத்திலும் மக்கள் நலனுக்காக நியாயமான தீர்மானம் எடுக்கலாம்.
- பிக்ஹ் துறையில் பயன்பாடு: நேரடி ஆதாரம் இல்லாத புதிய பிரச்சினைகளில் தீர்மானம் எடுக்கப் பயன்படுகிறது. காலத்திற்கேற்ற புதிய விஷயங்களில் சட்டக் கோட்பாடுகளை அமைக்க உதவுகிறது.
- பிரயோகிப்பதற்கான நிபந்தனைகள்:
  1. மஸ்லஹா நலன் யதார்த்தமானதாக இருக்க வேண்டும் அது பிரமையின் அடிப்படையில் அமைந்ததாக இருக்கக்கூடாது
  2. மஸ்லஹா நலன் எல்லோருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும்
  3. மஸ்லஹா ஷரீஆவின் நோக்கங்களுக்கு இயைந்ததாக இருக்கவேண்டும்
  4. ஒரு கஷ்டத்தை நீக்குவதாக அல்லது ஒரு நலனை காப்பதாக மஸ்லஹா அமைதல் வேண்டும்

**ii. பிக்ஹுக் கலை கடந்து வந்த ஐந்து காலகட்டங்களையும் குறிப்பிட்டு, அதில் ஒவ்வொரு கால கட்டத்தின் இயல்புகளையும் விளக்குக.**

1. பிக்ஹின் அரும்பு காலம் :
   - அனைத்து சட்டத் தீர்ப்புகளும் நேரடியாக குர்ஆன் மற்றும் நபி(ஸல்) அவர்களின் ஹதீஸ்களால் வழங்கப்பட்டது.
   - சட்டத் தீர்மானத்தில் வெளிப்படையான வஹி வழிகாட்டியது.
   - முஸ்லிம்களின் வாழ்க்கை அனைத்து துறைகளிலும் குர்ஆன், சுன்னாவின் வழிகாட்டுதலுக்கு இணங்க இருந்தது.

2. பிக்ஹ் நிலைபெறும் காலம் :
   - நபி(ஸல்) அவர்களின் தோழர்கள் குர்ஆன், ஹதீஸ் மற்றும் நியாய விசாரணை மூலம் தீர்ப்புகளை வழங்கினர்.
   - புதிய பிரச்சினைகளில் இஜ்திஹாத் (சிந்தனை அடிப்படையிலான தீர்ப்பு) பின்பற்றப்பட்டது.
   - பிக்ஹ் சட்டங்கள் வேரூன்றத் தொடங்கின.

3. பிக்ஹின் பொற்காலம்
   - நான்கு முக்கிய மத்ஹப்கள் (ஹனபி, மாலிகி, ஷா∴பிஈ, ஹன்பலி) உருவானது.
   - பிக்ஹ் நூல்கள் தொகுக்கப்பட்டு சட்ட அமைப்பு உறுதியாக நிலைபெற்றது.
   - இஸ்லாமிய சட்டத்தின் ஆழமான ஆய்வு, தொகுப்பு, வகைப்படுத்தல் நடைபெற்றது.

4. பிக்ஹின் தேக்கமும், வீழ்ச்சியும்
   - புதிய இஜ்திஹாத் முயற்சிகள் குறைந்து தக்லீத் (முன்னோர்களின் கருத்துக்களைப் பின்பற்றுதல்) அதிகரித்தது.
   - அரசியல் கலகங்கள் மற்றும் முஸ்லிம் பேரரசுகளின் வீழ்ச்சி பிக்ஹ் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தின.
   - சட்டப் புதுமைகள் தடைசெய்யப்பட்டன.

5. பிக்ஹின் மீள் எழுச்சி பெறும் காலம்
   - நவீன சமூக பிரச்சினைகளை கையாள இஸ்லாமிய சட்ட மறுபரிசீலனை தொடங்கியது.
   - மஸ்லஹா முர்ஸலா, மக்காஸித் ஷரீஅ போன்ற கோட்பாடுகள் மீண்டும் முக்கியத்துவம் பெற்றன.
   - நவீன அரசியல், பொருளாதாரம், மருத்துவம், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பிக்ஹ் புதிய தீர்வுகளை வழங்குகிறது.

**6.**

**i. இல்ஹாத் என்றால் என்ன என்பதை விளக்கி அதன் நவீன வடிவம் பற்றியும் கருத்துரைக்குக.**

- இல்ஹாத் என்பது இறைவனை மறுப்பது அல்லது மத நம்பிக்கையிலிருந்து விலகுவது என்பதைக் குறிக்கிறது. அல்லாஹ்வின் இருப்பை, மறுமை வாழ்வை மறுக்கும் நபர் ‘‘முல்ஹித்’’ என அழைக்கப்படுகிறார்.
- இல்ஹாதின் அடிப்படை சிந்தனை: மனித அறிவே எல்லாமெனக் கருதி தெய்வீக வழிகாட்டுதலை நிராகரிக்கும் நிலை. விஞ்ஞானம், பகுத்தறிவு, பொருளாதாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உலகை விளக்க முயற்சி. மறுமை நம்பிக்கையையும் ஒழுக்க நெறிகளையும் புறக்கணிக்கும் நோக்கு.
- இல்ஹாதின் நவீன வடிவம் மதச் சார்பின்மை (Secularism): மதம் மற்றும் அரசியல், கல்வி, சட்டம் ஆகியவற்றை பிரித்துப் பார்ப்பது. அரசின் கொள்கைகள் மத அடிப்படையின்றி உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் சிந்தனை. ‘‘மதம் தனிநபரின் தனிப்பட்ட விஷயம்’’ எனக் கூறி சமூக, கல்வி, நிர்வாகத்திலிருந்து மதத்தை நீக்கும் நோக்கு.
- மனிதன் தனது சிந்தனை, அறிவு ஆகியவற்றை அல்லாஹ்வின் வழிகாட்டுதலுடன் இணைத்து பயன்படுத்த வேண்டும். மதம் மற்றும் உலக வாழ்க்கை ஒன்றுடன் ஒன்று இணைந்தது என இஸ்லாம் வலியுறுத்துகிறது. இல்ஹாத் மற்றும் மதச் சார்பின்மை மனிதனை தெய்வீக வழிகாட்டுதல் இன்றியவராக மாற்றுகிறது எனக் கருதப்படுகிறது.

**ii. இஸ்லாமிய அகீதாவில் தோன்றிய முரண்பட்ட சிந்தனைப் பிரிவுகள் ஐந்தைக் சுருக்கமாக விளக்கி அவை சமூகத்தில் ஏற்படுத்திய பாதக விளைவுகள் ஐந்தை விபரிக்க.**

**கதரிய்யா:** மனிதன் தன் செயலைத் தீர்மானிக்க முழு சுதந்திரம் உடையவன் என நம்பினர். அல்லாஹ்வின் கத்ரை மறுத்தனர்.

**ஜபரிய்யா:** மனிதனுக்கு எந்த சுதந்திரமும் இல்லை. அனைத்தும் அல்லாஹ் கட்டுப்பாட்டில் நடைபெறுகிறது எனக் கூறினர். இதனால் மனித பொறுப்புக்கூறலை மறுத்தனர்.

**மு.ஃ.தஸிலா**: பகுத்தறிவை இறைநம்பிக்கைக்கு மேலாக வைத்தனர். குர்ஆன் படைக்கப்பட்டது என்ற கருத்தை முன்வைத்தனர் இதனால் அகீதா பிழைத்தது.

**கவ்வாரிஜ்:** பெரும்பாவம் செய்தவன் க.ஃ.பிர் எனக் கூறினர். அரசியல் கலவரம், இரத்தப்பொழிவு ஏற்படுத்தினர்.

**ஷீஆ:** இமாமத் கொள்கையை அடிப்படையாகக் கொண்டனர் நபி(ஸல்) பிறகு தலைமை அலி(ரலி) மற்றும் அவரது சந்ததியருக்கே என நம்பினர். சில பிரிவுகள் இமாம்களை பிழையற்றவர்களாகக் கருதி, அதீத நம்பிக்கைகள் உருவாக்கினர்.

**சமூகத்தில் ஏற்படுத்திய பாதக விளைவுகள்**

முஸ்லிம் ஒற்றுமை சிதைவு: சுன்னி–ஷியா மற்றும் பிற பிரிவுகளாகப் பிளவுபட்டதால் முஸ்லிம் சமூகம் பலவீனமடைந்தது.

அரசியல் கலவரம் மற்றும் உள்நாட்டு போர்கள்: கவ்வாரிஜ், ஷியா போன்ற குழுக்கள் அரசை எதிர்த்து எழுந்ததால் அரசியல் அசாதாரணம் ஏற்பட்டது.

இஸ்லாமிய நம்பிக்கையின் குழப்பம்: அல்லாஹ்வின் தௌஹீத், கத்ர், இமாம் பற்றிய நம்பிக்கைகள் முஸ்லிம்களிடம் மாறுபட்டன.

அறிவியல் வளர்ச்சியில் தடை: மதப் பிரச்சாரங்களிலும் விவாதங்களிலும் ஈடுபட்டு கல்வி, அறிவியல் முன்னேற்றம் பின்தங்கியது.

சமூக ஒற்றுமை பாதிப்பு: சகோதரத்துவம், பரஸ்பர நம்பிக்கை ஆகியவை குறைந்து முஸ்லிம்கள் இடையே வெறுப்பு வளர்ந்தது.

**7.**

**i. இலங்கை முஸ்லிம்கள் தேசிய அபிவிருத்தியிலும் நலனிலும் பங்களிப்பு செய்த விதங்களை விபரிக்குக.**

- **வர்த்தகத் துறையில் ஆற்றிய பங்களிப்புகள்**
  - மன்னர்களுக்கு வனிக ஆலோசகர்களாக செயற்பட்டமை
  - ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் இலங்கையை சர்வதேசத்தில் பிரதிநிதித்துவப்படுத்தியமை
- **போக்குவரத்து துறையில் ஆற்றிய பங்களிப்புகள்**
  - தவளம் போக்குவரத்து முறையை அறிமுகப்படுத்தியமை
  - கடல் மார்க்க பயணங்களில் அனுபவமும் நிபுனத்துவமும் பெற்றிருந்தமை
- **கைத்தொழில் துறையில் ஆற்றிய பங்களிப்புகள்**
  - நெசவுத் தொழிலை அறிமுகப்படுத்தி கைத்தொழிற்துறையை ஊக்குவித்தமை
- **மருத்துவத் துறையில் ஆற்றிய பங்களிப்புகள்**
  - மன்னர்களுக்கு மருத்துவ உதவிகளை வெளிநாட்டிலிருந்து பெற்றுக்கொடுத்தமை
  - யூனானி மருத்துவ முறை இலங்கையில் அறிமுகமாகக் காரணமாக இருந்தமை.
  - புராதன வைத்தியசாலையில் மருத்துவர்களாக முஸ்லிம்கள் பணியாற்றியமை.
- **இலங்கையின் சுதந்திரத்திற்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்புகள்**
  - சுதந்திரப் போராட்டங்களில் இலங்கையின் பெரும்பான்மை சமூகத்தவர்களுடன் சேர்ந்து குரல் கொடுத்தமை.
  - சுதந்திரத்தை வென்றெடுக்கவென 1919ல் உருவாக்கப்பட்ட தேசிய காங்கிரஸின் அதன் உபதலைவர்களில் ஒருவராக அறிஞர் டீ.பி . ஜாயா கடமையாற்றியமை.
  - அந்நியர்களை துரத்தும் விடயத்தில் முஸ்லிம்கள் வழங்கிய ஒத்துழைப்புக்காக மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் அக்குரனையில் காணி வழங்கி முஸ்லிம்களை அங்கு குடியேற்றியமை.
  - இலங்கையில் இருந்து அந்நியர்களின் ஆட்சியை இல்லாதொழிக்க போராட்டங்களில் கலந்து பங்களிப்பு செய்தமை.
  - இராணுவப்படைகளில் அங்கம் வகித்து ஒத்துழைப்பு வழங்கியமை.

**ii. பிற இனத்தவர்களிடையே இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் பற்றிய சரியான புரிந்துணர்வை ஏற்படுத்த பள்ளிவாசல்களால் மேற்கொள்ள முடியுமான திட்டங்களை எடுத்துரைக்குக.**

- பள்ளிவாசல்கள் மதங்களிடையேயான நல்லுறவை மேம்படுத்த உரையாடல் நிகழ்ச்சிகளை நடத்தலாம். பிற மத தலைவர்களையும் அறிஞர்களையும் அழைத்து ஒருவருக்கொருவர் கருத்துகளை பகிரலாம்.
- இஸ்லாத்தின் போதனைகள், அமைதி, நீதி, சகிப்புத்தன்மை குறித்து கருத்தரங்குகள், வகுப்புகள் நடத்தலாம்.
- மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் பாடநெறிகள் வழங்கலாம்.
- பள்ளிவாசல்கள் இரத்ததானம், ஏழை உதவி, இயற்கை பேரழிவுகளுக்கான நிவாரண உதவிகள் போன்ற பொதுநலத் திட்டங்களை ஏற்பாடு செய்து, முஸ்லிம்களின் மனிதநேயத்தை வெளிப்படுத்தலாம். இது முஸ்லிம்களைப்பற்றி நல்ல எண்ணத்தை பிற இனத்தவரிடையே உருவாக்கும்.

- பள்ளிவாசலை பிற இனத்தவருக்குத் திறந்துவைத்து, இஸ்லாமிய வழிபாடு, நாகரிகம், கலாசாரம் பற்றிய விளக்கங்களை வழங்கலாம். இதனால் தவறான புரிதல்கள் நீங்கி நேரடி அனுபவம் கிடைக்கும்.
- பள்ளிவாசல் சார்பில் சமூக ஊடகங்கள், வானொலி, செய்தித்தாள் போன்றவற்றின் மூலம் இஸ்லாமிய உண்மைகள், நல்லொழுக்கம், சமூக ஒற்றுமை குறித்த தகவல்களைப் பரப்பலாம்.
- பள்ளிவாசல்களில் இளைஞர்கள் மற்றும் பெண்கள் இணைந்து சமூகப் பணிகள், கலாசார நிகழ்ச்சிகள் மூலம் நல்லுறவு உருவாக்கலாம்.
- பொதுமக்களுக்காக இஸ்லாமிய நூல்கள், மத ஒற்றுமை தொடர்பான புத்தகங்கள் கொண்ட நூலகங்களை ஏற்பாடு செய்தல். இதனால் ஆர்வமுள்ளோர் உண்மையான அறிவைப் பெற முடியும்.

***(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5x 2=10 புள்ளிகள்)***

**8. பின்வருவன பற்றி விளக்கக் குறிப்பு எழுதுக.**

**i. இ்.ஜாஸுல் குர்ஆன்**

1. மொழி ரீதியான அற்புதம் : அரேபியர்கள் தமது மொழி திறமையில் பெருமை கொண்டிருந்த காலத்தில்தான் அல்குர்ஆன் அருளப்பட்டது. கவிதை, உரைநடை வல்லுனர்கள் அதன் மொழிச் சிறப்பை மறுக்க முடியாமல் வியந்தனர். வலீத் பின் முகீரா போன்றோர் அதன் இலக்கிய அழகை பாராட்டினர் — ‘‘அதற்குச் சுவையுண்டு, அதை எதுவும் மிகைக்க முடியாது’’ என கூறினார்.
2. தீர்க்கதரிசன ரீதியான அற்புதம் : எதிர்கால நிகழ்வுகளை முன்கூட்டியே அறிவித்தது. உரோமர்களின் தோல்வி மற்றும் பின்னர் அவர்களின் வெற்றி குறித்து (அத்தியாயம் அர்-ரூம்) கூறியது. இத்தீர்க்கதரிசனங்கள் பின்னர் உண்மையாகி வரலாற்றாசிரியர்களையே வியக்க வைத்தது. அல்குர்ஆனின் ஒவ்வொரு கூற்றும் நடைமுறையில் உண்மையென நிரூபிக்கப்பட்டுள்ளது.
3. அறிவியல் ரீதியான அற்புதம் : அறிவியல் நூல் அல்ல என்றாலும் பல விஞ்ஞான உண்மைகளை கூறுகிறது. இரண்டு கடல்கள் கலக்காதது (25:53), மகரந்தச் சேர்க்கை (அல்ஹிஜ்ர் : 22), கரு உருவாக்கம் (23:12–14, 86:5–7) போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளது. வானங்கள் உயர்த்தப்பட்டுள்ளதின் கருத்து (அர்-ரஅ்.த் : 2) போன்ற பல விஞ்ஞான தகவல்கள் பின்னர் அறிவியலால் உறுதி செய்யப்பட்டன. இத்தகைய தகவல்கள் அக்காலத்தில் யாருக்கும் தெரியாதவை என்பதால் இது இறையருளின் அற்புதம்.
4. சட்டவியல் ரீதியான அற்புதம் : மனித கடமைகள், உரிமைகள், குற்றங்கள், தண்டனைகள் போன்றவற்றுக்கான நீதி மிக்க வழிகாட்டுதல்கள் அளிக்கிறது. சட்ட வசனங்கள் இரு வகையானவை: தனிமனிதத்துக்குரியவை — தனி நபர் சீர்திருத்தத்துக்கான போதனைகள் சமூகத்துக்குரியவை — அரசியல், பொருளாதாரம், சர்வதேச உறவுகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் விதிமுறைகள்.

***(இவை போன்ற ஐந்து விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5x 1=5 புள்ளிகள்)***

**ii. முஜ்தஹித்களும் படித்தரங்களும்**

1. **முஜ்தஹித் முத்லக் :** முஜ்தஹித்களில் மிக உயர்ந்த நிலை உடையவர். இவர்கள் இரண்டு வகைகள் உள்ளன:

   அ) முஜ்தஹித் முஸ்தக்கில்

   இஜ்திஹாத் அடிப்படைகளை தாமாகவே வகுப்பவர்.

   சட்ட மூலாதாரங்களை (குர்ஆன், ஹதீஸ், இஜ்மா, கியாஸ்) திறமையாக கையாள்வார்.

   முரணான ஆதாரங்களில் சரியானதைத் தேர்ந்தெடுத்து காரணத்துடன் விளக்குவார்.

   தீர்வு இல்லாத புதிய பிரச்சினைகளுக்குத் தாமாக தீர்வு கூறுவார்.

உதாரணம்: ஸஹாபாக்கள், தாபிஉன், நான்கு இமாம்கள் (அபூ ஹனீபா, மாலிக், ஷா.ீபிஈ, அஹ்மத்).

ஆ) முஜ்தஹித் முன்தஸிப்
குறிப்பிட்ட ஓர் இமாமின் வழிமுறையைப் பின்பற்றி இஜ்திஹாத் செய்பவர்.
தனிப்பட்ட இஜ்திஹாத் ஆற்றலும் கொண்டவர்.
தனது இமாமின் பிழைகள் என்று கருதும் இடங்களில் பின்பற்றமாட்டார்.
புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வு கூறுவார்.
உதாரணம்: அபூ ஹனீபாவின் மாணவர்கள் – அபூ யூசுப், முகம்மது அஷ்ஷைபானி
இமாம் மாலிக் – அவ்வபீ, அபுல் காசிம்
இமாம் ஷா.ீபிஈ – புவைதீ
இமாம் அஹ்மத் – கல்லால், இப்னு தைமிய்யா

2. **முஜ்தஹித் பில் மத்ஹப்**
தனது இமாமின் மத்ஹபை பின்பற்றி அதற்குள் இஜ்திஹாத் செய்பவர்.
இமாமின் கோட்பாடுகள், விதிகள் ஆகியவற்றை நன்கு அறிந்தவர்.
இமாம் தீர்வு சொல்லாத புதிய பிரச்சினைகளில், அவரது வழிமுறையிலேயே தீர்வு கூறுவார்.
உதாரணம்: தகிய்யுத்தீன் (ஷா.ீபிஈ மத்ஹப்), இப்னுல் கையிம் (ஹனபி மத்ஹப்).

3. **முஜ்தஹித் பில் பத்வா**
முஜ்தஹித்களில் மிகக் குறைந்த படித்தரத்தில் உள்ளவர்.
குறிப்பிட்ட மத்ஹபில் ஆழ்ந்த அறிவு உடையவர்.
மத்ஹபில் காணப்படும் வேறுபட்ட கருத்துகளில் சரியான ஒன்றைத் தேர்ந்தெடுப்பார்.
புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்வதில்லை
உள்ள தீர்வுகளிலிருந்து சரியானதைத் தெரிவு செய்வதே இவரது பண்பு.

***(இவை போன்ற ஐந்து விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பின் 5x 1=5 புள்ளிகள்)***

**iii. மதீனா சாசனம்**

முஸ்லிம்கள் மதீனாவுக்கு வந்தவுடன் அமைத்த இஸ்லாமிய அரசில், முஸ்லிம் அல்லாதவர்களும் திம்மீக்கள் (முஸ்லிம்களது பாதுகாப்பைப் பெற்றவர்கள்) என்ற பெயரில் வாழ்வதற்கும் சமூக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய மதீனா அரசில் சிறுபான்மை என்ற பெயரில் யாரும் இருக்கவில்லை. அங்கு வாழ்ந்த எல்லோரும் எல்லாவிதமான உரிமைகளையும் பெற்று வாழ்ந்தனர். அதன் பிரதான அம்சங்கள் பின்வருமாறு அமைந்தன.

1. யூதர்களும், முஸ்லிம்களும் தத்தமது சமயத்தை முழுமையாகப் பின்பற்றலாம்.
2. இஸ்லாமிய அரசின் கீழ் வாழும் யூதர்கள் உதவி செய்யப்படுவர், நீதியாக நடத்தப்படுவர்.
3. தமது தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்கு அன்னிய சமூகத்தோடு இணைந்து போர் புரிய முஸ்லிம்களுக்கு யூதர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.
4. பொது நன்மைகளை எட்டுவதற்காக யூதர்களும், முஸ்லிம்களும் பரஸ்பரம் உபதேசம் செய்து கொள்வார்கள். பாவங்கள் அத்துமீறல்களுக்கு பரஸ்பரம் உதவ மாட்டார்கள்.
5. யாராவது ஏதும் ஒரு தவறு செய்தால் அது அவனுக்கு எதிரானதாக மட்டுமே பார்க்கப்படும். சமூக விவகாரமாக பார்க்கப்பட மாட்டாது.

***(இவை போன்ற ஐந்து விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5x 1=5 புள்ளிகள்)***

**iv. மகாஸிதுஷ் ஷரீஆ**

இஸ்லாமிய ஷரீஆவின் உன்னத நோக்கங்கள் மகாஸிதுஷ் ஷரீஆ என அழைக்கப்படுகின்றது.

‘‘மகாஸித்’’ என்பது ‘‘மக்ஸத்’’ என்பதன் பன்மையாகும். இலக்கு, நோக்கம், அடைவு, எதிர்பார்க்கும் விடயம் போன்ற கருத்துக்களை இப்பதம் குறித்து நிற்கின்றது. ‘‘இஸ்லாமிய ஷரீஆவில் மகாஸித் என்பது இஸ்லாமிய சட்டங்களின் இலக்கு அல்லது நோக்கம் அல்லது அடைவு, அல்லது

எதிர்பார்க்கும் விடயம் என்று பொருள் கொள்ளப்படும்'' அதாவது ஷரீஆ தனது போதனைகள் மூலம் அடைய விரும்புகின்ற இலக்குகளைக் குறிக்கின்றது. இக்கருத்தில் வேறு பல பிரயோகங்களையும் இமாம்கள் பயன்படுத்திவந்துள்ளனர். மஸாலிஹ்- நலன்கள் அஸ்ரார்- இரகசியங்கள் இலல் - காரணிகள் நதாஇஜ் - விளைவுகள், மஆல் அடைவுகள் போன்றவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

''மகாஸிதுஷ் ஷரீஆ'' பற்றிய சிந்தனை வளர்ந்து வந்த வரலாற்றுப் பின்னணியை நோக்கினால் குர்ஆனும், ஸுன்னாவும் சிலபோது சட்டங்களை முன்வைக்கும் சந்தர்ப்பங்களில் அந்தச் சட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டதற்கான காரணத்தையும் தொடர்புபடுத்தி நேரடியாகவோ. சூசகமாகவோ பேசியிருப்பதைக் காணலாம். இது, குறித்த சட்டம் தோற்றுவிக்கப்பட்டதன் இரகசியத்தை, நோக்கத்தை அல்லது காரணத்தை முன்வைப்பதாக உள்ளது. முஜ்தஹித்கள் இதனை விளக்க முற்பட்ட பின்னணியிலேயே இக்கலை தோன்றியதெனலாம். எனவே ஷரீஆவின் நோக்கம் வெறும் பகுத்தறிவு சரிகாணும் நலனன்று மாறாக படைப்பாளன் சரிகாணும் நலனாகும்.

அல்குர்ஆனும் ஸுன்னாவும் முன்வைக்கும் போதனைகளுக்குப் பின்னாலுள்ள நோக்கங்களை சில இடங்களில் தெளிவாக வரையறுத்துக் கூறியும் இன்னும் சில இடங்களில் மனித இஜ்திஹாத் ஆய்வுக்கு விட்டும் வைத்துள்ளன.

***(இவை போன்ற ஐந்து விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 5x 1=5 புள்ளிகள்)***

***